# யானைகள் பாதுகாப்பை உறுதி செய்வோம்



**சென்னை, ஆக. 12:** யானைகள் பாதுகாப்பை உறுதி செய்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உலக யானைகள் தினத்தையொட்டி, எக்ஸ் தளத்தில் அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட பதிவு: தமிழ்நாட்டின் இயற்கை மரபையும் வரலாற்றையும் செழுமைப்படுத்துவதில் யானைகளின் அளப்பரிய பங்கை சிந்தித்துப் பார்ப்போம். கோவை மாவட்டம், மதுக்கரையில் தமிழ்நாடு அரசு அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு எச்சரிக்கை அமைப்பின் மூலம் 2,800 முறை யானைகள் ரயில் தண்டவாளத்தைப் பாதுகாப்பாகக் கடந்து சென்றுள்ளன.

இதனால், கடந்த ஆண்டு பிப்ரவரியில் இருந்து ஒரு யானைகூட ரயில் மோதி உயிரிழக்காமல் காப்பாற்றியுள்ளோம். இனி வரும் காலங்களிலும் யானைகள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் திகழச் செய்ய உறுதியேற்போம் என்று அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

# பாமக உள்கட்சி அதிகார மோதல் விவகாரம்: தேர்தல் ஆணையத்தில் ராமதாஸ் தரப்பு புகார்

நமது நிருபர்



**புது தில்லி, ஆக. 12:** பாமக உள்கட்சி அதிகார மோதல் விவகாரத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் அன்புமணி மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையத்திடம் அக்கட்சியின் நிறுவனரான ராமதாஸ் தரப்பு செவ்வாய்க்கிழமை புகார் மனு அளித்துள்ளது.

இது தொடர்பாக ராமதாஸ் ஆதரவாளரும் அக்கட்சியின் செய்தித் தொடர்பாளராகவும் உள்ள பி. சுவாமிநாதன், தேர்தல் ஆணையத்தின் இயக்குநர் ஷுப்ரா சக்சேனாவை சந்தித்து மனு அளித்தார்.

அதில், பாமக தலைவராக அதன் நிறுவனர் - தலைவரான ராமதாஸே கடந்த மே 30-ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொண்டதாகவும் அதே நாளில் அன்புமணி செயல் தலைவராக நியமிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பின் மூலம் கட்சியின் தலைவராக அன்புமணி செயல்பட முடியாது. இருப்பினும், தலைவர் பதவியில் தொடரும் அன்புமணி, தனது சொந்த ஆதாயம் மற்றும் லாபங்களுக்காக கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருவதாகவும் அவர் மீது மத்திய உள்துறையும் மத்திய உளவுத்துறையும் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என்றும் மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 9-ஆம் தேதி அன்புமணி கூட்டியது பொதுக்குழுவே இல்லை என்றும் ஆணைய அதிகாரிகளிடம் முறையிடப்பட்டதாக சுவாமிநாதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் ராமதாஸ் வரும் ஆக.17-ஆம் தேதி கூட்டவுள்ள பொதுக்குழுவில் முறைப்படி அன்புமணிக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றி அதன் நகலை தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைக்குமாறும், முறைப்படி இரு தரப்பின் கடிதங்கள் வந்த பிறகு உரிய நடவடிக்கைக்கு பரிசீலிக்கப்படும் என்றும் அதிகாரிகள் கூறியதாக ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

# திட்டங்களின் பெயரை மாற்றி ஏமாற்றும் திமுக அரசு

## எடப்பாடி கே.பழனிசாமி குற்றச்சாட்டு

**கிருஷ்ணகிரி, ஆக. 12:** அதிமுக ஆட்சி திட்டங்களின் பெயரை மாற்றி திமுக அரசுமக்களை ஏமாற்றி வருகிறது என எடப்பாடி கே.பழனிசாமி குற்றம்சாட்டினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2-ஆவது நாளாக கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளில் சுற்றுப்பயணத்தை செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட அவர் பேசியதாவது:

கிருஷ்ணகிரி சட்டப்பேரவைத் தொகுதி அதிமுகவின் கோட்டை. முதல்வர் மு.க.ஸ்டாலின் பல திட்டங்களை அறிவித்ததாகவும், அந்த எரிச்சலில் நான் பேசுவதாகவும் கூறியுள்ளார். எங்கள் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் பெயர்களை மாற்றி, மக்களை ஏமாற்றி வருகிறார்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு அடியோடு சீர்கெட்டுள்ளது. காவலர்களுக்கு இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லை. எங்கள் ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு சிறப்பாக இருந்ததற்கு விருது வாங்கினோம். போதைப் பொருள் தமிழகத்தில் தாராளமாக கிடைக்கிறது. மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சட்டம் - ஒழுங்கு சீராகும்.

எங்கள் ஆட்சியில் அனுமதி பெற்று தந்த அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை தமிழக அரசு முறையாக பராமரிக்கவில்லை. போதிய மருத்துவர்களும், மருந்துகளும் இல்லை. ஏழை மக்களுக்கு முறையான சிகிச்சை இல்லை.

அதிமுக ஆட்சியில் விவசாயிகள் பாதிக்கப்படும்போதெல்லாம் நிவாரணம் வழங்கப்பட்டது. வறட்சி, புயல், வெள்ளம் எதுவந்தாலும் நிவாரணம் வழங்கினோம். வரிமேல் வரி போட்டு மக்களை கொடுமைப்படுத்தும் இந்த அரசு தேவையா? வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் அதிமுக அறுதி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்றார்.

பர்கூரில் அவர் பேசுகையில், திமுக ஆட்சிக்கு வந்து 50 மாதங்களாகியும் எந்த திட்டத்தையும் நிறைவேற்றவில்லை. அதிமுக ஆட்சியில் வழங்கப்பட்ட திருமண உதவித் திட்டம், தாலிக்குத் தங்கம், மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் என ஏழைகளுக்காக வழங்கப்பட்ட திட்டங்களை திமுக அரசு நிறுத்தியுள்ளது என்றார்.

அப்போது, அதிமுக துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ (வேப்பனப்பள்ளி), கொள்கை பரப்புச் செயலாளர் மு.தம்பிதுரை எம்.பி. உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரியில் பேசிய அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி. உடன், அதிமுக துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ, கொள்கை பரப்புச் செயலாளர் மு.தம்பிதுரை எம்.பி., கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.அசோக்குமார் எம்எல்ஏ உள்ளிட்டோர்.

# யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

**ஒசூர், ஆக. 12:** ஒசூர் அருகே யானை தாக்கியதில் விவசாயி உயிரிழந்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி அருகே உள்ள சூடசந்திரம் கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி காளப்பா (75). இவர் செவ்வாய்க்கிழமை அதிகாலை தோட்டத்துக்கு சென்றபோது, அருகிலுள்ள காட்டில் இருந்து வந்த யானை திடீரென அவரை தாக்கியது. இதில் காளப்பா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

யானை தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம்சாட்டிய உறவினர்கள், உடலை எடுக்கவிடாமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அதிகாரிகள் அவர்களை சமாதானப்படுத்தி, சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# இன்று திமுக மாவட்ட செயலர்கள் கூட்டம்

**சென்னை, ஆக. 12:** திமுக மாவட்டச் செயலர்கள் கூட்டம் புதன்கிழமை (ஆக.13) நடைபெறவுள்ளது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தல் குறித்து விவாதிக்கப்படவுள்ளது. மேலும், மாநிலம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் ஓரணியில் தமிழ்நாடு குறித்தும் ஆலோசிக்கப்படவுள்ளது.

ஆகஸ்ட் 15-ஆம் தேதியுடன் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படும் சூழலில், ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதுகுறித்த முடிவு திமுக மாவட்டச் செயலர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகிறது.


## GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.

பெருநிறுவன அலுவலகம் / தலைமை அலுவலகம்: GICHFL, நேஷனல் இன்சூரன்ஸ் பில்டிங், 6 ஆவது தளம், 14, ஜாம்ஷெட்ஜி டாடா சாலை, சர்ச்கேட், மும்பை 400 020. தொலைப்பேசி.: (022) 43041900 மின்னஞ்சல்: corporate@gichf.com இணையத்தளம் : www.gichfindia.com

• தாம்பரம் கிளை : எண்.2C, சாலமன் தெரு, ஆதி நகர் கிழக்கு தாம்பரம், சென்னை - 600059
கிளை மின்னஞ்சல் முகவரி: tambaram@gichfindia.com அலுவலக தொலைப்பேசி எண்: 044-40056991 தொடர்பு விபரங்கள்: 9847224940

• சென்னை கிளை அலுவலகம் - எண். 480, கிவ்ராஜ் காம்ப்ளக்ஸ்-2, 2 ஆவது தளம், அண்ணா சாலை (அரசு கலைக் கல்லூரி எதிரில்), நந்தனம், சென்னை - 600035
தொலைப்பேசி : 044 4203 4896/ 97 /99 கிளை மின்னஞ்சல் முகவரி : chennai@gichfindia.com அதிகாரப்பூர்வ அலுவலர்: 9894601538 & 9840873746

### E-ஏல விற்பனை அறிவிப்பு

**E-ஏல நாள்: 29.08.2025 / ஏலப்புள்ளிகளை சமர்ப்பிக்கக் கடைசி நாள்: 28.08.2025**

இதன்படி, கீழே கையொப்பமிட்டுள்ளவர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 இன்கீழ் GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட் (GICHFL).-இன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்படி சட்டம் பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து மீதான் உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும், பின்வரும் கடன்தாரர்கள் / அடமானதாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகையை திருப்பி செலுத்த கோரினார். எனினும், கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் அந்த நிலுவைத்தொகையை திருப்பி செலுத்த தவறியமையால், பின்வரும் சொத்துக்களை மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14 மற்றும் இதன் தொடர்புடைய மேற்சொன்ன விதிகளில் விதி 8 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தி **நேரடி சுவாதீனம்** எடுத்துள்ளார்.

| வ. எண் | கடன் கோப்பு எண் / கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் / கிளை பெயர் | சொத்தின் முகவரி & சொத்தின் பரப்பு (கட்டுமானப் பரப்பு சதுர அடியில்) | கோரிக்கை அறிவிப்பு / அனுப்பப்பட்ட செய்தித்தாள் தேதி | நேரடி / அடையாள சுவாதீன தேதி | 05.08.2025 நாள்படி மொத்த நிலுவைத்தொகை (POS, வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட) (ரூபாயில்) | குறைந்தபட்ச விலை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | TN0530100000014 / D மணிகண்டன் பிரபு (கடன்தாரர்) தாம்பரம் கிளை | பிளாட் எண்.1, ஃபிளாட் எண்.G1, டிசைன்ஸ் என்க்ளேவ், தரைத் தளம், ஜான்சி ராணி தெரு, டெல்லஸ் அவென்யூ ஃபேஸ்-1, கௌரிவாக்கம் கிராமம், தாம்பரம், சென்னை-600073 **மேல் கட்டுமானப் பரப்பளவு - 950 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு - 470 சதுர அடி மேலே மூடப்பட்ட கார் நிறுத்துமிடத்துடன் கூடியது (2BHK)** | 15-12-2017 & 04-09-2018 | 05-05-2020 (நேரடி) | 84,85,523/- | 25,06,950/- |
| 2. | TN0050610001985 சுப்ரமணியம் ஒசுரு (கடன்தாரர்) சென்னை கிளை | சாய் தாரா அடுக்ககம், வீட்டு எண் F3, முதல் தளம், பழைய எண் 26, புதிய எண் 73, பிளாட் எண். 45. ரயில்வே காலனி, 3ஆவது தெரு, சர்வே எண்.7, பகுதி T.S.எண். 24/1, அமைந்தகரை, சென்னை-600029 **பிரிக்கப்படாத பங்கு - 416 சதுர அடி மேல் கட்டுமானப் பரப்பளவு - 805 சதுர அடி (2BHK)** | 15.05.2017 & 22-06-2017 | 27.08.2019 (நேரடி) | 1,36,59,550/- | 60,90,000/- |
| 3. | TN0050610002211 / M திரிலோக் (கடன்தாரர்) / சென்னை கிளை | பிளாட் எண். 09. ஜெயம் அறக்கட்டளை "மூக்கையா ஃபிளாட்ஸ், ஃபிளாட் எண். F-2, 1வது தளம், அய்யப்பா நகர், 1வது தெரு, சர்வே எண். 81/1 & 82 புதிய சர்வே எண். 81/7, அயப்பாக்கம் கிராமம், அம்பத்தூர், சென்னை-600077, **பிரிக்கப்படாத பங்கு : 401 சதுர அடி மேல்கட்டுமானப்பரப்பளவு : 912 சதுர அடி மேலே மூடப்பட்ட கார் நிறுத்துமிடத்துடன் கூடியது (2BHK)** | 25-12-2018 & 13-02-2019 | 23-12-2024 (நேரடி) | 62,29,229/- | 32,87,430/- |
| 4. | TN0050610002159/ R ராஜேஷ் (கடன்தாரர்) சென்னை கிளை | ஃபிளாட் எண். F-2, 1வது தளம், பிளாட் எண். XIII, செயிண்ட் பிரான்சிஸ் நகர், சர்வே எண். 39/2, 39/3, 39/5, 40/2 & 40/1C, கோவில்பதாகை கிராமம், ஆவடி நகராட்சி-600062. **பிரிக்கப்படாத பங்கு : 294 சதுர அடி, மேல் கட்டுமானப்பரப்பளவு - 583 சதுர அடி (1BHK)** | 06-10-2017 & 05-12-2017 | 21-10-2019 (நேரடி) | 37,77,298/- | 13,77,000/- |

**E-ஏல நாள் மற்றும் நேரம்: 29.08.2025 அன்று (https://bankauctions.in) இணைய முகப்பில் பிற்பகல் 3:00 மணி முதல் மாலை 04:00 மணி வரை, தலா 5 நிமிடம் எண்ணிக்கை வரம்பற்ற காலநீட்டிப்புடன்.**

**டெண்டர் விலைப்புள்ளியை / மூடி முத்திரையிடப்பட்ட ஏலப்புள்ளியை உரிய விலைப்புள்ளிப் படிவத்தில் டேவணித்தொகை (EMD) மற்றும் வாடிக்கையாளர் விவரங்களுடன் (KYC) இணைய வழியிலோ மேற்குறிப்பிட்ட GICHF அலுவலகத்திலோ தாக்கல் செய்யக் கடைசி நாள்: 28.08.2025 அன்று மாலை 5.00 மணிக்குள்.**

மேலும் மேற்கண்ட சொத்துக்களின் / உடைமைகளின் (SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் விதிகளின்படியான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான) E-ஏல விற்பனைக்கான இந்தப் பொது அறிவிப்பின் மூலம் குறிப்பிட்ட சொத்துக்களை **"உள்ளது உள்ள இடத்தில்"** மற்றும் **"உள்ளது உள்ளபடி"** எனும் முறையில் வாங்குவதற்கான விலைகோரல்கள் மூடி முத்திரையிட்ட உறைகளில் அல்லது இணைய வழியில் GICHFL நிறுவனத்தால் வரவேற்கப்படுகின்றன.

**ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:**

1. E-ஏலமானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "மாற்று எதுவும் வழங்கப்பட மாட்டாது" எனும் அடிப்படைகளில் இணையவழியில் நடைபெறும். இந்த E-ஏலம் GICHF நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட E-ஏலச் சேவை வழங்குநரான "M/s. 4குளோசியூர்" நிறுவனத்தால் நடத்தப்படும்.
2. **ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்கள் பெயரை https://bankauctions.in எனும் இணைய முகப்பில் பதிவு செய்து கொண்டு தங்களுக்கான பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். கலந்து கொள்ள இருக்கும் ஏலதாரர்கள் E-ஏலத்துக்கான இணைய வழிப் பயிற்சியைப் பின்வரும் சேவை வழங்குநரிடம் பெறலாம்: M/s. 4குளோசியூர், #605 A, 6ஆவது தளம், மைத்ரிவனம், அமீர்பேட்டை, ஐதராபாத் - 500038, தெலுங்கானா. அலுவலக தரைவழிப்பேசி எண்: 040-23736405 மற்றும் உதவிக்குழு: 8142000062 / 66, திரு. பிரகாஷ் - 8142000064 / 8142000725, prakash@bankauctions.in, GICHFL தொடர்பு விவரங்கள்: 9847224940 (தாம்பரம்) 9840873746 (சென்னை)**
3. E-ஏல விற்பனையானது SARFAESI சட்டம் / விதிகள் 2002-இன் கீழான விதிமுறைகளுக்கும் கீழே / இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் ஆர்வமுள்ள / கலந்து கொள்ளும் ஏலதாரர்களால் தாக்கல் செய்யப்பட உள்ள விலைகோரல் / ஏலப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டது.
4. இணைய வழி E-ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர் ஒவ்வொருவருக்கும் சொந்த மின்னஞ்சல் முகவரி இருக்க வேண்டியது கட்டாயமானது.
5. ஆர்வமுள்ள ஏலதாரர் ஒருவர் GICHF நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் முன்னிலையில் தகுதியுள்ள விலைப்புள்ளிதாரராக முறையாகப் பதிவு செய்யப்பட்டவுடன் அவர் ஆவணத்தைத் தாக்கல் செய்து இணைய முகப்பின் வழியே E-ஏலத்தில் கலந்து கொள்வதற்கான தனது ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டும். E-ஏலச் சேவை வழங்குநரிடமிருந்து தனக்கான பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பெற வேண்டியது விலைப்புள்ளிதாரரின் / இணைய வழி ஏலதாரரின் தனிப்பட்ட பொறுப்புக்குரியது.
6. மேற்கண்ட சொத்துக்கள் மேற்குறிப்பிட்ட குறைந்தபட்ச விலைக்குக் கீழே விற்பனை செய்யப்படமாட்டாது.
7. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச விலையில் 10% அளவுள்ள டேவணித்தொகையைக் (EMD) கேட்பு வரைவோலை / RTGS / NEFT மூலம் GIC HOUSING FINANCE LTD எனும் பெயருக்குச் செலுத்த வேண்டிய வங்கி விவரங்கள் பின்வருமாறு: **வங்கியின் பெயர்: யூனியன் பாங்கு ஆப் இந்தியா, கணக்கு எண்: 00511101000039, கணக்கின் பெயர்: GIC HOUSING FINANCE LTD AUCTION A/C, கிளையின் பெயர்: LCB, ஃபோர்ட், முகவரி: UBI, 239 பேக்பே ரெக்லமேடியோ நரிமன் பாயிண்ட், மும்பை, மகாராஷ்டிரா, அஞ்சல்குறியீடு 400021, IFSC எண்: UBIN0800511.**
8. வெற்றி பெறும் ஏலதாரர்களைப் பொறுத்த வரையில் அவர்களது மேற்கூறிய வைப்புத்தொகைகள் பின்னர் கழித்துக் கொள்ளப்படும். மற்றவர்களுக்கு அவை திருப்பி அளிக்கப்படும். டேவணித்தொகைக்கு (EMD) வட்டி ஏதும் கிடையாது.
9. மேற்கூறிய டேவணித்தொகையுடன் (EMD) கூடிய விலைகோரல்களை இணைய வழியில் தாக்கல் செய்ய வேண்டிய இணைய முகப்பு: https://bankauctions.in/. இத்துடன் டேவணித்தொகையும் நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை மற்றும் முகவரிச் சான்று முதலான வாடிக்கையாளர் விவர ஆவணங்களின் (KYC) நகல்களும் இணைக்கப்பட்டுச் சேவை வழங்குநரிடம் தாக்கல் செய்யப்பட வேண்டும். அல்லது ஏலப் படிவம், டேவணித்தொகை மற்றும் வாடிக்கையாளர் விவர ஆவணங்கள் ஆகியவற்றை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட உரிய கிளை அலுவலகங்களுக்கு டேவணித்தொகை தாக்கல் செய்வதற்கான கடைசி நாளுக்கு முன்னர் வந்து சேருமாறு தாக்கல் செய்ய வேண்டும்.
10. விலைப்புள்ளிகள் திறக்கப்பட்ட பின் குறைந்தபட்ச விலைக்குக் குறையாமல் ஏலம் கோரியுள்ள ஆர்வமுள்ள ஏலதாரர்களுக்கு அதிகாரப்பூர்வ அலுவலரின் தனிப்பட்ட விருப்புரிமையின் பேரில் ஏலத்தொகையை உயர்த்திக் கோர வாய்ப்பு வழங்கப்படும்.
11. வெற்றி பெறும் ஏலதாரர்கள் ஏற்கெனவே செலுத்திய டேவணித்தொகை (EMD) போக, விற்பனை விலையில் 25% தொகையை விற்பனைக்கான அதிகாரப்பூர்வ அலுவலரால் விலைகோரல் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடனே செலுத்த வேண்டும். தவறினால் டேவணித்தொகை பறிமுதல் செய்யப்படும். விற்பனை விலையில் மீதமுள்ள 75% தொகையை அதிகாரப்பூர்வ அலுவலரின் விருப்புரிமையின் பேரில், விற்பனை உறுதி செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் செலுத்தலாம். இந்தக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மீதத் தொகையைச் செலுத்தத் தவறினால், ஏற்கெனவே செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும். பறிமுதல் தொடர்பாக வெற்றி பெற்ற ஏலதாரருக்கு அதிகாரப்பூர்வ அலுவலர் அறிவிப்பு ஏதும் அனுப்ப வேண்டியதில்லை.
12. ஏலதாரர்கள் "கேவியட் எம்ப்ட"ருக்குக் (வாங்குவோர் எச்சரிக்கை) கட்டுப்பட்டவர்கள் என்பதால் கடனீட்டுச் சொத்து அல்லது நிறுவனத்தின் மீது வில்லங்கங்கள், சட்டப்படியான பொறுப்புக்கூறல்கள், சொத்து வரி - வருமான வரி - ஆயத் தீர்வை போன்ற நிலுவைகள், தொழிலாளர் நிலுவைகள், மின்சாரம் மற்றும் பராமரிப்பு நிலுவைகள் முதலானவை ஏதேனும் உண்டா என்பது குறித்துத் தாங்களே சொந்தமாக ஆழ்ந்து விசாரித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் விற்பனை விலை மட்டுமின்றி நகராட்சி வரிகள், பராமரிப்பு / சங்கக் கட்டணங்கள், மின் கட்டணங்கள், குடிநீர்க் கட்டணங்கள், முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணங்கள் (விதிக்கப்பட்டால்) முதலான அனைத்துச் செலவுகளும் சொத்துக்கள் தொடர்பான அனைத்துப் பிற இடைநிகழ் கட்டணங்கள், செலவினங்கள் முதலான அனைத்துச் செலவுகளும் வெற்றி பெற்ற ஏலதாரர்களையே சாரும்.
13. விற்பனைச் சான்றிதழுக்காகச் செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணம், முத்திரைத் தீர்வை, வரிகள் போன்ற கட்டணங்களும் வெற்றி பெற்ற ஏலதாரர்களின் பெயருக்குக் கடனீட்டுச் சொத்தை மாற்றுவதற்காக வேறு ஏதேனும் தீர்வைகள் செலுத்த வேண்டியிருந்தால் அவையும் வெற்றி பெற்ற ஏலதாரர்களையே சாரும்.
14. விற்பனைச் சான்றிதழானது மொத்த / விற்பனைத் தொகையும் வரப்பெற்ற பிறகு மட்டுமே, அதுவும் வெற்றி பெற்ற ஏலதாரரின் பெயரில் மட்டுமே வழங்கப்படும்.
15. இதன் மூலம் கடன்தாரர்கள், அடமானதாரர்கள், ஜாமீன்தாரர்கள் ஆகியோருக்கு அறிவிப்பது யாதெனில், மேற்கூறிய சொத்துக்களை E-ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப வாங்க ஆர்வமுள்ள வாங்குநர்களை / கொள்முதலாளர்களை அவர்கள் அழைத்து வரலாம்.
16. மேற்கூறிய சொத்துக்களின் ஆய்வு, கோரிக்கையில் பேரிலும் அதிகாரப்பூர்வ அலுவலரின் வசதிக்கேற்பவும் நடைபெறும்.
17. அதிகாரப்பூர்வ அலுவலர் உச்சபட்ச விலைகோரலையோ வேறெந்த விலைகோரலையோ அனைத்து விலைகோரல்களில் எதையுமோ ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை. மேலும் எந்தக் காரணமும் தெரிவிக்காமல் எந்த விலைப்புள்ளியையும் அல்லது அனைத்து விலைப்புள்ளிகளையும் ஏற்கவும் தள்ளுபடி செய்யவும் அவருக்கு உரிமை உண்டு.
18. மேற்கூறிய சொத்துக்களின் மீது நிலுவையில் இருக்கக்கூடிய எந்தப் பொறுப்புக்கூறல் தொடர்பாகவும் GICHFL பொறுப்பேற்காது. சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "மாற்று எதுவும் வழங்கப்பட மாட்டாது"** எனும் அடிப்படைகளிலேயே ஏலம் விடப்படும்.
19. கடன்தாரர்கள் / அடமானதாரர் விற்பனை உறுதிப்படுத்தப்படும் முன்பு GICHFL நிறுவனத்தை அணுகி ஒப்பந்தப்படியான நிலுவைத்தொகைகள் + செலவுகள் + விற்பனை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 15% வட்டி + விற்பனை விலையில் 5% (விற்பனை முடிந்துவிட்ட நிலையில் என்றால் வெற்றி பெறும் ஏலதாரருக்கு அளிக்கும் பொருட்டு) ஆகியவற்றைச் செலுத்துவதாகக் கூறி விற்பனையை ரத்துச் செய்யக் கோரினால் GICHFL அத்தொகைக்கு ஒப்புக்கொண்டு சுவாதீனத்தை அடமானதாரர் வசம் ஒப்படைக்கும்.
20. உச்சபட்ச ஏலதாரர் ஏல விலையில் 25% (ஏற்கெனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) தொகையை விற்பனை அறிவிப்பின் விதிமுறைகளுக்கேற்ப உடனடியாகச் செலுத்துவதோடு ஏல விலையின் எஞ்சியுள்ள 75% தொகையை 15 நாட்களுக்குள் அல்லது இரு தரப்பினருக்கு (அதிகாரப்பூர்வ அலுவலர் மற்றும் வெற்றி பெறும் ஏலதாரர்) இடையில் ஒப்புக்கொள்ளப்பட்ட காலநீட்டிப்புக்குள் செலுத்த வேண்டும். எப்படியானாலும் விற்பனை நாளிலிருந்து 30 நாட்கள் முடிந்த பின்னர் அதிகாரப்பூர்வ அலுவலரால் விற்பனைச் சான்றிதழ் வெளியிடப்பட்டு விற்பனை உறுதி செய்யப்பட வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் இந்த 30 நாட்கள் முடிவதற்கு முன்பாக விற்பனை உறுதிப்படுத்தப்பட மாட்டாது. முழுத் தொகையும் பெறப்பட்ட பின்னரே விற்பனை உறுதிப்படுத்தப்பட்டு விற்பனைச் சான்றிதழ் வெளியிடப்பெறும்.
21. **குறைந்தபட்ச ஏல உயர்வுத் தொகை: ரூ.10,000/-**

**SARFAESI சட்டம் 2002-இன் கீழான முறைப்படியான 15 நாள் விற்பனை அறிவிப்பு**

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றையும் சொத்துக்களின் முழு விவரத்தையும் அறிய அணுக வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட E-ஏலச் சேவை வழங்குநரான M/s. 4 குளோசியூர் நிறுவனத்தின் இணையத்தளம்: https://bankauctions.in.

நாள்: 13.08.2025
இடம்: தாம்பரம் / சென்னை

GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., சார்பில்
ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்



## DhanlaxmiBank

established 1927

பிராந்திய அலுவலகம் : ஓம் சக்தி டவர்ஸ், 2வது தளம், எண்.163, அண்ணா சாலை, சென்னை - 600 002, போன் : 044-49037025.

பிராந்திய அலுவலகம் : தமிழ்நாடு கார்ப்பொரேட் அலுவலகம் : திருச்சூர்

### தங்க நகை மின்-ஏல அறிவிப்பு

**தனலட்சுமி வங்கி லிட்.,**-லிருந்து கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரருக்கு தங்க நகைக்கான கடனின் கீழ் அவர் பெற்ற கடன் தொகைக்கான நிலுவைகளை திரும்பச் செலுத்தக் கோரி அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன, ஆயினும் கடன்தாரர் அவரது கடன் கணக்கு நிலுவைத் தொகையை திரும்பச் செலுத்தத் தவறிவிட்டபடியால் வங்கி தன்வசம் அடகு வைக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிட்டவாறான தங்க நகைகளை ஆன்லைன் மின்னணு ஏலம் (மின்-ஏலம்) மூலமாக **HTTP://GOLD.SAMIL.IN** தளத்தில் **21.08.2025 அன்று பிற்பகல் 12.30 மணி முதல் மாலை 3.30 மணிக்குள் "எங்குள்ளதோ அங்கு" "என்ன உள்ளதோ அது"** என்ற அடிப்படையில் ஏலம் விட உத்தேசித்துள்ளது. இந்த ஏலமானது வங்கியின் நிலுவையை வசூலிக்கும் பொருட்டு, வங்கியின் தனிப்பட்ட முடிவின்படி, தங்கத்தின் சுத்தத்தன்மை, தரம் மற்றும் எடை ஆகிய எந்த ஒரு தொடர்புடைய விஷயத்திலும் எந்தவிதமான நடப்பு மற்றும் தொடர் உத்தரவாதம் ஏதுமில்லை என்ற நிபந்தனையுடன் நடைபெறுகிறது. வங்கி கீழ்குறிப்பிட்ட கணக்குகளில் எதனையும் முன்னறிவிப்பு ஏதுமின்றி ஏலத்தினின்று விலக்கி வைக்கவோ அல்லது ஏலத்தேதியை மற்றும் நேரத்தை மாற்றி நிர்ணயிக்கவோ உரிமை உடையதாகும்.

**அசோக் நகர் கிளை :**

| வ.எண் | கடன்தாரர் பெயர் | கடன் கணக்கு எண் | நிலுவைத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | P.கண்ணன் | 017856100006794 | ரூ.24,002.00 |
| 2 | தனசேகர்.S | 017856200015319 | ரூ.5,44,417.00 |

நகைகளின் எடை, சுத்தத்தன்மை, குறைந்தபட்ச நிர்ணயவிலை, விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகள், ஏலத்தில் பங்கேற்கப் பதிவு செய்து கொள்ளுதல் முதலியவை குறித்த மேலும் தகவல்களறிய, விருப்பமுள்ள ஏலதாரர்கள் மேற்குறிப்பிட்ட வலைதளத்தில் உள் நுழையவும் (login); அல்லது ஏலதள மேடை / வங்கியைத் தொடர்பு கொள்ளவும். இந்த மின்-ஏலம், கால நிலை அல்லது பிற காரணங்களால் குறிப்பிட்ட நாள் / நேரத்தில் முடிக்கப்படா விட்டால் வங்கி இந்த ஏல தேதியிலிருந்து 7 வேலை நாட்களுக்குள், அல்லது வங்கிக்கு விருப்பமான போது வங்கி எந்த நாளிலும் வங்கி விதித்துள்ள அதே விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் வங்கியின் தகவல் பலகையில் அத்தகைய நடவடிக்கையை நாள் மற்றும் நேரத்துடன் அறிவிப்பு வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடன்பெற்றவர் இறந்திருந்தால், ஏலத்தின் அனைத்து நிபந்தனைகளுக்கும் அவர்களது சட்டபூர்வ வாரிசுகளுக்கும் பொருந்தும். கடன்தாரர்/கள் அவர்களால் அடமானம் வைக்கப்பெற்ற தங்க நகை இனங்களை ஏல நாள் வரை திரும்பப் பெறும் உரிமை உடையவர்களாவர்.

இடம் : சென்னை
தேதி : 12.08.2025

ஒம்/-
அங்கீகரிக்கப்பட்ட கையொப்பம்,
தனலக்ஷ்மி வங்கி லிட்.,



## கனரா வங்கி

சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை

எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண். 9740145622
மின்னஞ்சல் : cb7901@canarabank.com

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரருக்கான

### மீட்பு அறிவிப்பு [பிரிவு 13(8)]

REF: CHN/NORTH/REDEMPTION/KARTHICKU — நாள்: 11.08.2025

தேதி : 11.08.2025
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி,
கனரா வங்கி



## கனரா வங்கி

சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை

எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண். 9740145622
மின்னஞ்சல் : cb7901@canarabank.com

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரருக்கான

### மீட்பு அறிவிப்பு [பிரிவு 13(8)]

REF: CHN/NORTH/REDEMPTION/ARJUNAN MADHU — நாள்: 08.08.2025

தேதி : 08.08.2025
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி,
கனரா வங்கி



## கனரா வங்கி

சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை

எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண். 9740145622
மின்னஞ்சல் : cb7901@canarabank.com

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரருக்கான

### மீட்பு அறிவிப்பு [பிரிவு 13(8)]

REF: CHN/NORTH/REDEMPTION/MUTHUKANI — நாள்: 08.08.2025

தேதி : 08.08.2025
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி,
கனரா வங்கி